**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.75
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் வாழ்வியலில் உண்டாட்டு

**முனைவர் ப. ரேவதி**

இணைஆய்வறிஞர், சுவாமி விவேகானந்தர் உயராய்வு மற்றும் கல்வி மையம்,

பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641 046

பேசி 99946 49818, மின்னஞ்சல் revatamil08@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

உண்டாட்டு என்பது பண்டைய தமிழர் வாழ்வியலுடன் இயைந்த போர் சார்ந்த கொண்டாட்ட நிகழ்வாகும். போரில் பகைவரிடமிருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்களின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கள்ளும், இறைச்சியும் உண்டு களித்து ஆடும் விழாவாக உண்டாட்டு அறியப்பெறுகின்றது. பண்டைத் தமிழர் வாழ்வியலில் இடம்பெற்றிருந்த உண்டாட்டைக் கள்ளுண்டு களிக்கும் உணவு விருந்தாகக் கருதிப் புறக்கணிக்க இயலாது. உண்டாட்டு, வீரத்தைப் போற்றும் விழாவாகவும் சமூக ஒற்றுமையை வளர்க்கும் நிகழ்வாகவும் கொடைப்பண்பின் வெளிப்பாடாகவும் பழந்தமிழரின் உணவுசார் பண்பாட்டின் அடையாளமாகவும் அமைகின்றது. சங்க காலம் தொடங்கி இன்று வரை சமூகத்தில் மலிந்திருக்கும் போதைசார் நுகர்வு சங்க கால உண்டாட்டின் நீட்சியாக அமைகின்றது. சமகாலத்திலும் போற்றத் தக்க வெற்றிக்குப் பிறகு நீளும் கள்ளுண்டு களித்தல் தொடர்புடைய விருந்து முறைமைகள் சங்க கால உண்டாட்டின் எச்சமாக அமைகின்றது. ஈராயிரம் ஆண்டு கால வரலாறு கொண்ட உண்டாட்டு எனும் புற வாழ்வியல் சார்ந்த உணவுப் பண்பாட்டுக்கூறின் பரிமாணங்களைச் சங்க இலக்கியத்தை ஆய்வு எல்லையாகக் கொண்டு தொகுத்தளிக்குமாறு **பண்டைத் தமிழரின் வாழ்வியலில் உண்டாட்டு** எனும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

உண்டாட்டு, கள், புறம், சங்க இலக்கியம்

**முன்னுரை**

பண்டைத் தமிழர் அகம், புறம் எனும் வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருந்தனர். புறத்திணையியல், புறவாழ்வோடு தொடர்புடைய போர், வீரம், புகழ், கொடை போன்ற

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நிகழ்வுகளைத் திணை மற்றும் துறைகளாக வகைப்படுத்துகிறது. அவற்றுள் ஆநிரைகளைக் கவர்ந்திடும் வெட்சித்திணைக்குரிய துறைகளில் ஒன்றாக உண்டாட்டு இடம்பெறுகிறது. எனவே, சங்க காலத்தில் உண்டாட்டு என்பது சமூக வாழ்வு, போர் வெற்றி, வீரர் போற்றல் ஆகியவற்றோடு தொடர்புடைய புறத்திணைத்துறை என்பதனை அறிய முடிகின்றது. அத்தகு உண்டாட்டு புற வாழ்வியலில் பரவலாக்கம் பெற்றிருந்த பான்மையை தொகுத்தளிக்கும் வகையில், **பண்டைத் தமிழரின் வாழ்வியலில் உண்டாட்டு** எனும் இவ்வாய்வு அமைகின்றது.

**உண்டாட்டு – இலக்கணம்**

நிரை பகுத்த மறவர் கள்ளுண்டு களிப்பினால் அயரும் விளையாட்டாகக் கருதப்பெறும் உண்டாட்டைத் தொல்காப்பியம்,

**“படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி**
**தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடையென**
**வந்த ஈரேழ் வகையிற்டறு ஆகும்”**[1]

எனுமாறு வரையறுக்கின்றது.

வீரத்தோடும் வீரர்களோடும் மகிழ்வைப் பகிர்தலைக் கள்ளோடு இணைத்துத் தொல்காப்பியத்தின் வழிநின்று எழுந்த புறப்பொருள்வெண்பாமாலை,

**“உண்டாட்டு உயர்கொடை புலனறி சிறப்பு”**[2]
**“மன்னைக் காஞ்சி கட்காஞ்சியே”**[3]
**“தொட்டிமிழுங் கறன்மறவர்**
**மட்டுண்டு மகிழ்ந்கன்று”**[4]
**“நறுமலியு நறுந்தா ரோன்**
**மறமைந்தர்க்கு மட்டீந்தன்று”**[5]

எனும் பாக்களில் வெளிப்படுத்துகின்றது.

**வளமையின் குறியீடு - கள்**

உண்டாட்டு நாட்டின் வளக்குறியீடாகக் கருதப்பெற்றது. பாரியின் நாட்டு வளத்தை விளக்க முனைந்த பாவலர், மழைக்காலத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, மக்கள் குளிர் போக்கப் பனங்குடைகளில் ஊற்றிக் கொடுக்கப்படும் கள்ளை அருந்தி மகிழும் வளமான பறம்பு மலையை ஆளும் வள்ளல் பாரி என்று குறிப்பிடுகின்றார். இதனை,

**“பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி”** [6]

எனும் பா உணர்த்துகின்றது. மேலும்,

**“நார்அறி நறவின் எருமையூரன்”**[7]
**“இரும்பிழி மாஅர் இவ்அழுங்கல் மூதூர்”**[8]

**“முழவு உறழ் பலிவின் பிழி மகிழ் உவகையன்”[9]**

**“மேம்பிழி நறவின் குறவர் முன்றில்”[10]**

எனும் இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன.

**நடுகல் வழிபாட்டில் கள்**

பழந்தமிழர் மரபில் நடுகல் வழிபாடு வீர வழிபாட்டின் முக்கிய வடிவமாகும். போரில் வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக நடுகல் நிறுவப்பட்டு, அதனைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் பண்டைத் தமிழரிடத்துக் காணப்பெற்றுது. இவ்வழிபாட்டில் கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

நடுகல்லுக்குப் படையலாகக் கள் படைக்கப்பட்டது. வீரன் உயிருடன் இருந்தபோது விரும்பி உண்டவற்றை நடுகல் முன் படைப்பது வழக்கமாக இருந்தது; அவற்றுள் கள்ளும் ஒன்றாகும். களை நடுகல் மீது தெளித்தும், கலங்களில் நிரப்பி வைத்தும் வழிபட்டனர். கள் படைத்தல் என்பது வீரனை மகிழ்வித்தல் மற்றும் அவரது ஆவியைப் போற்றுதல் என்ற நம்பிக்கையுடன் மேற்கொள்ளப்பட்டது. கள், இறைச்சி, மலர், மயிற்பீலி போன்றவற்றுடன் சேர்ந்து நடுகல் வழிபாட்டின் அங்கமாக விளங்கியது. இதனை,

**“நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து**
**தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்”[11]**

**“நனைமுதல் நறவின் நாட்பலி கொடுக்கும்”[12]**

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

**பெருஞ்சோற்றுநிலையில் கள்**

பெருஞ்சோற்று நிலையின் போது வீரன் ஒருவன் முறை தவறி, அரசனுக்குக் கொடுத்த கள்ளைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறி வாளைக் கையில் எடுத்துக்கொண்டு நின்றான். அவன் செயலால், அங்கிருந்தவர்கள் சினமுற்றனர். அதைக் கண்ட புலவர் விரிச்சியூர் நன்னாகனார், "அவ்வீரன் கள் குடிப்பதில் மட்டும் முந்திக் கொள்பவன் அல்லன்; அவன் போரிலும் அப்படித்தான். ஆகவே, அவன் மீது சினம் கொள்ள வேண்டா." என்று மறவர்களுக்கு அறிவுரை கூறுவதாக,

**“வேந்தற்கு ஏந்திய தீம்கண் நறவம்**
**யாம் தனக்கு உறுமுறை வளாவ விலக்கி**
**வாய் வாள் பற்றி நின்றன் என்று” [13]**

எனும் பாடல் அமைகின்றது.

**பரிசில் நிலையில் கள்**

ஆநிரைகளைக் கவரும் வீரர்கள் தாம் கவர்ந்த ஆநிரைகளுக்கு மாற்றாக கள்ளைப் பரிசிலாகக் பெறும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடத்துக் காணப்பெற்றது. சான்றாக, அடிபக்கத்தில்

முள்ளுடைய காரைச் செடியின் முதிர்ந்த பழத்தைப் போன்று நன்கு முதிர்ந்த கள்ளையுடைய கந்தாரம் என்னும் இடத்திலிருந்து தான் கொண்டுவந்து நிறுத்திய ஆநிரைகளுக்கு ஈடாகக் கள்ளை வாங்கிப் பருகி, வளமான ஊனைத் தின்று தன் எச்சில் கையை வில்லின் நாணில் துடைத்துவிட்டு, சிறிய தாடியையுடைய காளை போன்ற அந்த இளைஞன் இப்பொழுது வேறொரு இடத்திற்குச் சென்றிருக்கிறான். இங்குள்ளவர்கள் அனைவரும் ஒருமுறை கள் குடிப்பதற்குள், அவன் ஆநிரைகளைக் கவர்ந்துகொண்டு வந்துவிடுவான். அவன் கள்ளை விரும்புபவன். வரும்பொழுது மிகுந்த தாகத்தோடு வருவான். அதனால், முதிர்ந்த கள் உள்ள சாடியிலிருந்து அனைவருக்கும் கள் கொடுப்பதைத் தவிர்த்து, அக்கள்ளைப் பாதுகாப்பாயாக எனும் பொருள்படும்,

**“முட்கால் காரை முதுபழன் ஏய்ப்பத்**
**தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்**
**நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு,**
**பச்சூன் தின்று, பைந்நிணப் பெருத்த**
**எச்சில் ஈர்ங்கை விற்புறம் திமிரிப்,**
**புலம்புக் கனனே, புல்அணற் காளை,**
**ஒருமுறை உண்ணா அளவைப், பெருநிரை**
**ஊர்ப்புறம் நிறையத் தருகுவன் ; யார்க்கும்**
**தொடுதல் ஓம்புமதி முதுகட் சாடி;**
**ஆதரக் கழுமிய துகளன்,**
**காய்தலும் உண்டு, அக் கள்வெய் யோனே”** [14]

எனும் பாடல் அமைகின்றது.

**மறவர்களைக் கள்ளுடன் வரவேற்றல்**

உண்டாட்டு எனும் துறையில் கள் மதிப்பு மிகு பரிசிலாக அமைகின்றது. ஆநிரைகளைக் கவரச் சென்ற மறவர்களை கள்ளுடன் வரவேற்ற பான்மையை, மதுரைப் பேராலவாயர்,

மதுவைப் பிழியுங்கள்; ஆட்டை வெட்டுங்கள். பசிய இலைகளால் வேயப்பட்ட சிறிய கால்களுடைய பந்தரில் ஈரமுடைய புதுமணலைப் பரப்புங்கள்; பகைவரின் தூசிப்படையை அழித்துத் திரும்பிவரும் தனது படைக்குப் பின்னே நின்று, ஆநிரைகளுடன் வரும் என் தலைவனுக்குப் பக்கத்தில் துணையாக உள்ள மறவர்கள் அவனைவிட மிகவும் சோர்வுடன் இருப்பார்கள். பின்னணி: தலைவன் பகைவர் நாட்டிலிருந்து பசுக்களைக் கவர்ந்துவரச் சென்றிருந்தான். அவன் வரவுக்காக மதுரைப் பேராலவாயர் காத்திருந்தார். தலைவன் தன் துணைமறவர்களுடனும், தான் கவர்ந்த பசுக்களுடனும் திரும்பி வந்தான். அங்குள்ள மக்கள் பெரும் ஆரவாரத்துடன் அவனை வரவேற்றனர்.

தலைவனின் வெற்றியைப் பாராட்டி அங்கே ஒரு உண்டாட்டு நடைபெற்றது எனப் பதிவு செய்கின்றார். இதனை,

**“நறவும் தொடுமின் ; விடையும் வீழ்மின்;**
**பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்**
**புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்-**
**ஒன்னார் முன்னிலை முருக்கிப், பின்நின்று;**
**நிரையோடு வரூஉம் என்னைக்கு**
**உழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே”** [15]

எனும் பா உணர்த்துகின்றது.

**முடிவுரை**

உண்டாட்டு என்பது போரில் வெற்றி பெற்ற வீரர்கள் ஒன்றுகூடி கள்ளும் உணவும் உண்டு மகிழும் நிகழ்வாகும். சங்ககாலப் போர்வாழ்வில் இது ஒரு முக்கியமான பண்பாட்டுக் கூறாக விளங்கியது. குறிப்பாக, போர்க்களத்தில் உண்டாட்டு பல்வேறு சமூக மற்றும் உளவியல் முக்கியத்துவங்களைக் கொண்டிருந்தது. அதனை,

- போரில் வீரத்துடன் போராடிய வீரர்களின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் உண்டாட்டு நடைபெற்றது. இதன் மூலம் அவர்களின் வீரச் செயல்கள் சமூக அங்கீகாரம் பெற்றமை புலனாகின்றது.
- தொடர்ச்சியான போரினால் ஏற்பட்ட உடல் மற்றும் மனச் சோர்விலிருந்து வீரர்கள் மீளுவதற்கு உண்டாட்டு உதவியது. உணவும் கள்ளும் அவர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் பான்மையில் வழங்கப்பெற்றன.
- வீரர்கள் அனைவரும் ஒன்றுகூடி உண்டு மகிழ்ந்ததால், அவர்களிடையே நட்புணர்வும் படை ஒற்றுமையும் வலுப்பெற்றன.
- உண்டாட்டு நிகழ்வுகளில் வீரச் செயல்கள் போற்றப்பட்டன. இதனால் பிற வீரர்களும் போரில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எழுச்சியைப் பெற்றனர்.
- அரசர்கள் போரில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விருந்து அளித்து அவர்களைக் கௌரவித்தனர். இதன் மூலம் அரசரின் வள்ளன்மையும் வீரர்களின் மீதான அக்கறையும் வெளிப்பட்டன.
- பகைவரை வென்ற பின் நடைபெற்ற உண்டாட்டு, வெற்றியின் அடையாளமாகவும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும் அமைந்தது.

**அடிக்குறிப்புகள் / மேற்கோள்கள் பட்டியல் (MLA Style)**


**[1.]** கௌமாரீஸ்வரி, எஸ்., பதிப்பாசிரியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2016, நூ. 61, ப. 74.

**[2.]** திருஞானசம்பந்தம், ச., உரை ஆசிரியர். *புறப்பொருள் வெண்பாமாலை*. [பதிப்பகம் பெயர்], [ஆண்டு], நூ. 1, ப. 2.

**[3.]** திருஞானசம்பந்தம், ச. *புறப்பொருள் வெண்பாமாலை*. நூ. 3, ப. 4.

**[4.]** திருஞானசம்பந்தம், ச. *புறப்பொருள் வெண்பாமாலை*. நூ. 15, ப. 9.

**[5.]** திருஞானசம்பந்தம், ச. *புறப்பொருள் வெண்பாமாலை*. நூ. 21, ப. 81.

**[6.]** பாலசுப்பிரமணியன், கு. வெ., உரை ஆசிரியர். *நற்றிணை மூலமும் உரையும்*. [பதிப்பகம் பெயர்], [ஆண்டு], பா. 253, ப. 466.

**[7.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. [பதிப்பகம் பெயர்], [ஆண்டு], பா. 36, ப. 104.

**[8.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 122, ப. 373.

**[9.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 295, ப. 876.

**[10.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 78, ப. 234.

**[11.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 35, ப. 101.

**[12.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 213, ப. 637.

**[13.]** செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*. பா. 292, ப. 647.

**[14.]** சுப்பிரமணியன், ச. வெ. *சங்க இலக்கியம் மூலம் முழுவதும்*. [பதிப்பகம் பெயர்], [ஆண்டு], புறநானூறு, பா. 258.

**[15.]** சுப்பிரமணியன், ச. வெ. *சங்க இலக்கியம் மூலம் முழுவதும்*. புறநானூறு, பா. 262.